திரு. என். கே. பழனிசாமி: இந்தத் தீர்மானத்தை முழு மனதோடு ஆதரிக்கிறேன். இந்தத் தீர்மானத்தை ஒரு கட்சியினுடைய தீர்மானமாக இல்லாமல், சகல கட்சிகளைச் சேர்ந்தவர்களும், சகல பகுதி மக்களும் ஏகோபித்து கூறியிருக்கிறார்கள் என்று மத்திய சர்க்கார் ஏற்றுக் கொண்டு இதற்கு உடனடியாக நிவாரணம் கொடுக்க வேண்டும். ஏற்கனவே அறிஞர் அண்ணா காலத்தில் நாம் கிளர்ச்சி நடத்தி, சகல கட்சிகளும் கேட்டுக் கொண்டதற்கு இணங்க சேலம் உருக்காலையையும், அதே மாதிரி சகல கட்சிகளும் சேர்ந்து வற்புறுத்தியதன் காரணமாக பஞ்ச நிவாரணத்திற்கு உதவியையும் பெற்றோம். அதேமாதிரி, இந்தப் புயலின் காரணமாக சேதம் ஏற்பட்டதற்கு சகல கட்சிகளும் கேட்டுக் கொண்டதற்கிணங்க பணம் கிடைத்தது. அதேமாதிரி, இந்த பிரச்சினையைப்பற்றி அங்கேயிருக்கிற மோகன் குமாரமங்கலம் அவர்களும், சுப்பிரமணியம் அவர்களும் கணக்கில் எடுத்து, தீர்மானத்தையும், மக்களுடைய அபிலாஷைகளையும் நேரடியாக எடுத்துச் சொல்லி, உடனடியாக கைத்தறிக்கு நிவாரணம் பெறவேண்டுமென்று சொல்லி, வரவேற்று முடித்துக் கொள்கிறேன்.

திரு. எம். முத்தையா: மாண்புமிகு தலைவர் அவர்களே, நமது தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த இந்த தீர்மானத்தை, எங்கள் கட்சியின் சார்பாக, ஆதரித்து, நெசவாளர்களுடைய துயர் துடைக்க எல்லா கட்சிகளும் ஒருங்கிணைந்ததற்காக பாராட்டி, எனது கட்சியின் சார்பாக நான் வரவேற்று அமர்கிறேன்.

திரு. துரை கோவிந்தராசன்: தலைவர் அவர்களே, தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த இந்தத் தீர்மானத்தை, நெசவாளர்களுடைய பிரச்சினையைத் தீர்க்கின்ற இந்த நல்ல தீர்மானத்தை, எங்களுடைய கட்சியின் சார்பாக முழுமனதோடு ஆதரித்து முடிக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள மிக முக்கியமான தீர்மானத்தை அனைத்துக் கட்சிகளுடைய சார்பிலே அவைகளுடைய தலைவர்களும் மாண்புமிகு உறுப்பினர்களும் வரவேற்று, மத்திய அரசினுடைய கவனத்தை இந்தப் பெரிய பிரச்சினையிலே திருப்புவதற்கு உதவிகரமாக இருந்ததற்காக என்னுடைய நன்றியையும் பாராட்டுதலையும் அவர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இது 10 இலட்சம் நெசவாளர் பெருமக்களுடைய மிகப் பெரிய பிரச்சினையை உள்ளடக்கிய தீர்மானமாகும். இந்தத் தீர்மானத்தை நம்முடைய மாநிலச் சட்டப் பேரவையிலே நாம் நிறைவேற்றி விடுவதன்மூலம் சுமையை வேறு